**சுருக்கம்**

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – கேளிக்கை வரி விலக்களிக்க அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையை ஏற்று "**திருமணம் எனும் நிக்காஹ்**" தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கை நிராகரித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

19802

**அரசாணை (டி) எண். 239** **நாள். 20.06.2014**
**ஜய, ஆனி 6,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:–**

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி மற்றும் பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. வணிகவரி ஆணையர் கடிதம் எண். சட்டக்குழு–4/15116/2014, நாள் 20.05.2014 தேர்வுக்குழு எண்.14/2014–2015.
4. சென்னை உயர்நீதிமன்ற நீதிபேராணை மனு எண்கள் 31064, 30808, 29757 மற்றும் 29891/2013 நாள் 16.04.2014.
5. அரசுக் கடிதம் எண்.6622/சி1/2014–1, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 22.5.2014.
6. தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர், கடிதம் ந.க.எண்.நிதி 3/4424/2014, நாள் 27.5.2014.

-----

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. முதன்மைச்செயலர் / வணிகவரி ஆணையர், மூன்றாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட தேர்வுக் குழு "**திருமணம் எனும் நிக்காஹ்**" திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட ஐந்து உறுப்பினர்களில், அலுவல் சாரா உறுப்பினர் செல்வி L.R.ஈஸ்வரி, பின்னணி பாடகி அவர்கள் "**திருமணம் எனும் நிக்காஹ்**" என்ற திரைப்படத்திற்கு வரி விலக்களிக்க சம்மதமில்லை என தெரிவித்துள்ளதாகவும், மற்றொரு உறுப்பினரான திரு.சங்கர் கணேஷ், இசையமைப்பாளர் அவர்கள் திரைப்படம் வரிவிலக்கிற்கு தகுதியானது எனப்பரிந்துரைத்து பின்னர் அதன்மீது குறுக்கே கோடிட்டுள்ளார் எனவும், இதர மூன்று உறுப்பினர்களும் "**திருமணம் எனும் நிக்காஹ்**" என்ற திரைப்படம் கேளிக்கை வரி விலக்கு அளிப்பதற்கு தகுதியானது என பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

3. "**திருமணம் எனும் நிக்காஹ்**" தமிழ் திரைப்படத்தை பார்வையிட்ட தேர்வுக்குழு உறுப்பினர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு :-

| வ. எண் | உறுப்பினர் திரு/திருமதி | பரிந்துரை |
|---|---|---|
| 1. | க.இசைவாணி, இணை ஆணையர் (வணிகவரி) (சட்டம்), முதன்மை செயலர்/ வணிகவரி ஆணையர், சென்னை -5. | 'திருமணம் எனும் நிக்காஹ்' தமிழ் பெயருடன் திருமணம் என்ற தமிழ் சொல்லுக்கு இணையான உருதுவில் நிக்காஹ் என்ற சொல்லுடன் பெயரிடப்பட்டுள்ளது என்பதாலும் இந்து முகமதியர்கள் பழக்க வழங்கங்களையும் ஒற்றுமையையும் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டு கதைக்கு ஏற்ப பெயரும் திருமணம் எனும் நிக்காஹ் என்று வைக்கப்பட்டுள்ளது என்று கருதலாம் என்றும் 'U' சான்றிதழ் பெற்ற திரைப்படம் என்பதாலும், திரைப்படத்தின் கருவானது தமிழ் பண்பாட்டின் வளர்ச்சிக்கு உகந்ததாக உள்ளதாலும், திரைக்கதையில் தேவைப்படும் இடங்களில் கதைக்கேற்ப பிற மொழி கையாளப்பட்டுள்ளது என்பதாலும், திரைப்படத்தில் வன்முறை மற்றும் ஆபாசம் இல்லை என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்கலாம் என பரிந்துரை செய்துள்ளார். |
| 2. | க.அன்னை, துணைச் செயலாளர் தமிழ் வளர்ச்சி அறநிலையங்கள் (ம) செய்தித்துறை | "**திருமணம் எனும் நிக்காஹ்**" தமிழில் திருமணம் என்று சொல்லி அடை மொழியாக நிக்காஹ் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் இதனை தமிழில் பெயரிடப்பட்டுள்ளதாக கருதலாம் என்றும், திரைப்படத்தில் தேவைக்கேற்ப பிற மொழி (உருது) கலந்துள்ளது என்பதாலும், திரைப்படத்தில் வன்முறை மற்றும் ஆபாசங்கள் அதிக அளவில் இடம் பெறவில்லை என்பதாலும், இந்து |

| | | |
|---|---|---|
| | | முகமதியர் ஒன்றுமையை இத்திரைப்படம் விளக்குகிறது என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கிற்கு பரிந்துரை செய்துள்ளார். |
| 3. | சங்கர் கணேஷ், இசையமைப்பாளர் | திருமணம் என்கிற நிக்காஹ் தமிழில் பெயர் உள்ளது என்பதாலும், தமிழில் சொல்லி பிறகு தான் நிக்காஹ் என்று திரைப்படத்திற்கு தேவை என்று சொல்லிருக்கிறார்கள் என்றும், திரைப்படத்தில் வன்முறை அதிகம் இல்லை, ஆபாசம் மற்றும் பெண்களை இழிவுப்படுத்துதல் ஆகியவை இல்லை என்பதாலும், திரைப்படத்தில் தேவைக்கேற்ப பிறமொழி கலந்துள்ளது என்பதாலும், இந்து முஸ்லீம் ஒற்றுமையை விளக்கும் திரைப்படம் என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்களிக்க பரிந்துரை செய்து பின்னர் அதன்மீது குறுக்கே கோடிட்டு அடித்துள்ளார். |
| 4. | R.V.உதயகுமார், இயக்குநர் | திரைப்படத்தின் தலைப்பு தமிழ் விளக்கத்துடன் இஸ்லாமிய வழக்காடு வார்த்தை நிக்காஹ் என்றுள்ளது (நிக்காஹ்) என்பது பெயர்ச் சொல்லாக ஏற்புடையதே என்று கருதுவதாலும், 'U' சான்றிதழ் பெற்ற திரைப்படம் என்பதாலும், திரைப்படத்தில் வன்முறை அதிகம் இல்லை, ஆபாசம் இல்லை என்பதாலும் திரைக்கதைக்கேற்ப பிற மொழி சிறிதளவு உள்ளது என்பதாலும், திரைப்படத்தில் இந்து முஸ்லீம் ஒன்றுமையை அழகாக சொல்லப்பட்டுள்ளது என்பதாலும், இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு தர பரிந்துரை செய்துள்ளார். |
| 5. | L.R. ஈஸ்வரி, பின்னணிப் பாடகி | திரைப்படத்தின் பெயர் தமிழில் இல்லை என்பதாலும் திரைப்படத்தில் நிறைய உருது சொற்கள் இடம் பெற்றுள்ளதாலும், திரைப்பாடலிலும் இந்தியும் உருதும் கலந்து இருக்கிறது என்பதாலும், அரசாணையின் விதி முறைக்கு அப்பாற்பட்ட திரைப்படம் என்பதாலும் இத்திரைப்படத்திற்கு வரி விலக்கு அளிக்க சம்மதம் இல்லை என பரிந்துரை செய்துள்ளார். |

4. இந்நிலையில், "**திருமணம் எனும் நிக்காஹ்**" என்ற திரைப்படத்தின் தலைப்பில் "**நிக்காஹ்**" என்ற பிறமொழிச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே, "**நிக்காஹ்**" என்ற சொல் தமிழில் வழக்கில் உள்ள சொல்லா என்பதை தெளிவுபடுத்துமாறு மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் "**நிக்காஹ்**" என்பது தமிழ்ச் சொல் அல்ல. உருது மொழிச் சொல் ஆகும் என தெரிவித்தார்.

5. மேற்கண்ட சூழலில், "**திருமணம் எனும் நிக்காஹ்**" என்ற திரைப்படத்தில் "**நிக்காஹ்**" என்ற உருதுச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதாலும், அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி மற்றும் பதிவு (சி1) துறை, நாள் 21.7.2011–க்கு முரணாக உள்ளதாலும், "**திருமணம் எனும் நிக்காஹ்**" என்ற திரைப்படத்திற்கான கேளிக்கை வரி விலக்கு கோரிக்கையினை நிராகரிக்கலாமென முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே. பிரபாகர்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.

நகல்:

முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

27/6/2014

பிரிவு அலுவலர்.